1970 மார்ச் 20]

Cuddalore Port

* 464 Q.—Thiru K. SAHADEVA KANDER: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether the construction of Southern break-water at Cuddalore Port Beach has been taken up for execution; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) கடலூர் துறைமுகத்தின் தென்பகுதியில் அலைத்தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடந்து வருகிறது. துறைமுக வளர்ச்சித் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 1,15,24,000 ரூபாயில் குறிப்பிட்ட இப்பணிக்காக 9,50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அலைத் தடுப்புச் சுவரின் மொத்த நீளம் 500 அடி ஆகும். அந்த 500 அடியில் 159 அடி நீளம் சிமிட்டி கான்க்ரீட்டில் 4,10,000 ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 341 அடி நீளத்துக்குக் கூழாங்கல் பதித்த அலைத் தடுப்புச் சுவர் கட்டப்படும். சிமின்ட் கான்க்ரீட்டினால் தோணித்துறை கட்டும் பணி முன்னேறி வருகிறது. இத்திட்டத்தை 1971-ம் ஆண்டு மார்ச் திங்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. கே. சகாதேவக் கண்டர்: தலைவர் அவர்களே, இந்த வேலையை பூர்த்தி செய்ய எவ்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, 1971 மார்ச் மாதத்திற்குள்ளாக கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட தடுப்புச் சுவர்கள் துறைமுகப் பகுதிகளில் மட்டும் கட்டப்படுகிறதா? அல்லது ஊர் அழிந்துவிடக்கூடிய நிலைமையுள்ள இடங்களில் ஊர்களைப் பாதுகாக்க தடுப்புச் சுவர் கட்டப்படுமா? திருச்செந்தூர் பகுதியில் உள்ள கோயிலை கடல் அலை அரித்து வருகிறது. அப்படிப்பட்ட இடங்களில் தடுப்புச் சுவர் கட்டப்படுமா? அந்தப் பகுதியிலிருந்து தடுப்புச் சுவர் கட்டவேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, நான் சொன்ன விடை துறைமுக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தடுப்புச் சுவர் கட்டுவதைப் பற்றி. துறைமுக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் தடுப்புச் சுவர் கட்டப்படுகிறது. கடல் அரிப்பு பற்றிய வினாக்களை பொதுப்பணித் துறை அமைச்சருக்கு எழுதியனுப்பினால் அவர் பரிசீலனை செய்வார்.

Rice Bran Oil Mill in Thanjavur district

*465 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state the details of the Rice Bran Oil Mill proposed to be set up in Thanjavur district?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தஞ்சை மாவட்டம், திருவாரூரில், தவிட்டு எண்ணெய் ஆலை ஒன்று 19,75,000 ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப் பட்டிருக்கிறது. இந்த ஆலை நாள் ஒன்றுக்கு முப்பது டன், தவிட்டிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் சக்தியுள்ளது. இந்த ஆலையை அமைப்பதற்கு 4,93,500 ரூபாய், பங்குத் தொகையாகவும், 9,87,500 ரூபாய், நீண்டகாலக் கடனாகவும் வழங்கப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த தவிட்டு எண்ணெய் ஆலை வேலை தொடங்கி, அதிகமாக எண்ணெயை உற்பத்தி செய்துகொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவர் அவர்களே, இந்த ஆலை கட்டி முடிக்கப்பட்டு, 8--12---1968-ம் தேதியிலிருந்து ஓடிக்கொண்டிருக்கிறது.

திரு. வி. டி. அண்ணாமலை: வடஆற்காடு மாவட்டத்திலும் நெல் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. செய்யாரில் ஒரு நவீன அரிசி ஆலை ஒன்றும் நிறுவப்பட்டிருக்கிறது. ஆகவே அங்கே தவிட்டில் இருந்து எண்ணை எடுக்கும் ஆலை ஒன்றை ஏற்படுத்துவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தவிட்டில் இருந்து எண்ணை எடுப்பதற்கு பத்து நவீன அரிசி ஆலைகளில் கிடைக்கும் தவிடு தேவைப் படுகிறது. செய்யாரில் இப்போதுதான் ஒரு நவீன அரிசி ஆலை ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இன்னும் இதுபோல பல நவீன அரிசி ஆலைகள் அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தப்படும். அவைகள் ஏற்பட்ட பிறகு தவிட்டு எண்ணை ஆலை ஒன்றும் அங்கே துவங்கப்படும். அது கூட்டுறவுத்துறையில் தான் துவங்கப்படவேண்டும் என்று இல்லை. ஒரு டன் எண்ணை மூவாயிரம், மூவாயிரத்து ஐநூறுவரை விற்கிறது. நூறு டன் தவிட்டில் மூன்று, நான்கு முழு டன் எண்ணை வரக்கூடும். இது தனியார் துறையில் துவங்கப்படுவ தற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டாலும், அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

திரு. கே. போஜன்: இந்த அரிசித் தவிட்டில் இருந்து கிடைக்கிற எண்ணெய் எந்த எந்த வகையில் உபயோகப்படுத்தப்படலாம்? மனிதர்கள் உண்பதற்கு நல்ல சக்தி உடையதாக இருக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த எண்ணெய் சுத்தப்படுத்தப் படாமலேயே சோப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது. சுத்தப் படுத்தினால் மனிதர்களுக்கு நல்ல சக்தி தரும் உணவாக இருக்கும். சுத்தப் படுத்தி தேங்காய் எண்ணையைப்போல பயன்படுத்துவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

பச்சபனட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கம்

*** 466 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) ஓசூர் தாலுக்கா, பச்சபனட்டி என்ற ஊரில், பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில், சுமார் மூன்று லட்சம் ரூபாய் வரை மோசடி நடந்த தாக வழக்கு தொடரப்பட்டதா?